**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.254/2015**

பெயர்-திரு. நஞ்சையப்பன் நாள்.26.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**-

**1)** 1-ம் வாதி சுப்பம்மாளின் தந்தை நஞ்சப்பகவுடரும், எனது தந்தை கெம்பண்ணகவுடரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால், சரிதான். தாவா சொத்துக்களை மேற்படி சகோதரர்கள் இருவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்களா என்றால், சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் விவரங்கள் எனக்கு தெரியும். சுப்பம்மாள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும் வாதி தாவா சொத்தில் சரிபாதி பங்கு கேட்டு வழக்கு செய்துள்ளார். வழக்கு பிராதில் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 1-ம் வாதிக்கு 65 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் எனக்கு வயது 62 என்றும், 2-ம் பிரதிவாதிக்கு 58, 3-ம் பிரதிவாதிக்கு 55, 4-ம் பிரதிவாதிக்கு 52 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எதிர்வழக்குரையில் 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் நஞ்சப்பகவுடர் 75 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணம்தான் நஞ்சப்பகவுடர் மற்றும் கெம்பண்ணகவுடர் ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்ததற்கு ஆவணம் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ-2 ஐ தவிர வேறு மூலஆவணம் இல்லை என்றால், சரிதான். எனது உடன் பிறந்த சகோதரிகள் 3, 4 -ம் பிரதிவாதிகளுக்கு திருமணம் ஆகி சுமார் 45, 50 ஆண்டுகள் இருக்கும். 3, 4 பிரதிவாதிகள் திருமணத்திற்கு பிறகு அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். எனது தகப்பனார் கெம்பண்ணகவுடர் 1998-ல் காலம்சென்றுவிட்டார்.

**2)** எனது தந்தையாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். 1998-ல் எனது தந்தை இறக்கும்வரை தாவா சொத்துக்கள் சம்மந்தமாக யாருக்கும் எந்த ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றால், சரிதான். நஞ்சப்ப கவுண்டர் காலம்சென்ற பிறகு அவரது மனைவி மாதம்மாள் எங்கு வசித்து வந்தார் என்றால், அவரது 7 வயது மகளான சுப்பம்மாளை அழைத்துக் கொண்டு சிக்கரசம்பாளையத்தில் வசித்து வந்தார். நஞ்சப்ப கவுண்டர் காலம்சென்ற பிறகு அவரது மனைவி, மகளுக்கு வேறு பாதுகாப்பு இல்லை என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. 19.09.1980-ல் மாதம்மாள் மற்றும்

1-ம் வாதி எனது தகப்பனாருக்கு ஆவணம் எழுதிக் கொடுத்தாக கூறப்பட்டுள்ள வா.சா.ஆ.1 விடுதலை ஆவணத்தில், சிக்கரசம்பாளையத்தில் அவர்கள் வசித்தார்கள் என காட்ட ஆவணம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி ஆவணம் எழுதிக் கொடுத்தவர்கள் மற்றும் எழுதி வாங்கியவர்களின் புகைப்படங்கள் இல்லை என்றால், சரிதான். நான் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றால், மாரண்ணகவுடர், குள்ளப்ப கவுடர் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள். மேற்படி சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் எனது உறவினர்களா என்றால், இல்லை.

3) மேற்படி சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால், குள்ளப்ப கவுடர் காலம்சென்றுவிட்டார். மாரண்ணகவுடர் படுத்த படுக்கையில் உள்ளார். அதனால் மாரண்ணகவுடரை சாட்சியாக விசாரிக்க முடியாது என்றால், நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் நிலையில் அவர் இல்லை. மாரண்ணகவுடர் மற்றும் குள்ளப்பகவுடர் ஆகியோர்கள் பஞ்சாயத்து பேசியவர்கள் என்றால், சரிதான். எனது தகப்பனார் கெம்பண்ணகவுடரும் பஞ்சாயத்து பேசுவார் என்றால், சரிதான். மேற்படி சாட்சிகள் மற்றும் எனது தகப்பனாருக்கு பஞ்சாயத்து பேசுவதால், பழக்கம் மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளது என்றால், இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில் 1-ம் வாதி சுப்பம்மாளுக்கு என்ன வயது இருக்கும் என்றால், சுமார் 55 வயது இருக்கும். 1-ம் வாதியின் தாயார் மாதம்மாளுக்கு சுமார் 100 வயது இருக்கும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பானரும், இரண்டு சாட்சிகளும் சேர்ந்து ஆவணத்தில் உள்ள விவரங்களை சொல்லாமல் மோசடியாக எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் 22.07.1975-ல் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நான் பட்டா புத்தகத்தை பார்த்தது இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உடைமையாளராக கெம்பண்ணகவுடர் த/பெ ராமைய்யகவுடர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4) 19.09.1980 வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி வாங்குவதற்கு முன்பாகவே, தாவா சொத்திற்கான பட்டா எனது தந்தை கெம்பண்ணகவுடர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணமான கந்தாய ரசீது 1972 முதல் 1979 ஆண்டிற்கான கந்தாய ரசீதில் எனது தந்தை பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தை வாதிகளுக்கு வழங்கக்கூடாது என்பதற்கான எனது தந்தை வாதிகள் பாதுகாப்பாக இல்லாததை அனுகூலமாக கொண்டு, 1972 வருடத்திலிருந்தே அவரது பெயரில் வரி செலுத்தி மாற்றிக்கொண்டார் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-4 ஆவணத்தில் 19.09.1980 ல் ஆவணம் எழுதி

வாங்கியுள்ள நிலையில், எனது தந்தை பெயருக்கு பட்டா 23.10.2015-ல்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதற்கு முன்பாகவே வழங்கப்பட்டுள்ளது. எனது தந்தை 1998 இறந்துவிட்டார் என்றால், சரிதான். 2015-ல் பட்டா வழங்கிய சமயத்தில் எனது தந்தை உயிருடன் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணங்கள் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது, அதன் மூல ஆவணங்கள் என்ன என்றும், யார் யார் சேர்ந்து தயார் செய்தார்கள் என்று தெரியுமா என்றால், தெரியும். சத்தியமங்கலத்தில் தயார் செய்தார்கள் நானும் சென்றேன். பத்திரம் தயார் செய்தவர் பெயர் எனக்கு தெரியாது. பத்திரத்தில் உள்ள வாசகங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

**5)** 19.09.1980 வா.சா.ஆ.1 உண்மையான ஆவணமாக இருந்திருந்தால், 1980 ஆண்டிலேயே பட்டா மாறுதல் செய்து, ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்திருப்பேன் என்றால், நாங்கள்தான் அனுபவத்தில் இருந்தோம். 2015-ல் 1-ம் வாதி மற்றும் அவரது தாயார் மாதம்மாள் சொத்தில் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது எனக்கு தெரியும். அதன்பின்னிட்டுதான் எனது தந்தை பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. அதற்கு முன்பாகவே பட்டா வாங்கப்பட்டு விட்டது. எனது தந்தையின் பெயரில் எந்த வருடம் பட்டா வாங்கப்பட்டது என்றால், 1962-லேயே ரீ.சர்வேயின் போது பட்டா வழங்கப்பட்டது. வா.சா.ஆ-1 ஏற்படுத்தப்பட்டு 35 ஆண்டுகள் கழித்து பட்டா மாறுதல் செய்ய முயற்சி செய்து, மாற்றியுள்ளோம் என்றால், சரியல்ல. பட்டா மாறுதல் செய்தபிறகுதான், 01.09.2015-ல் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்குவிசாரணைக்காக மீண்டும் ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.26 04:17:44 +0530

District Munsif